தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### <u>வங்கக் கடலில் புயல் சின்னம் தமிழகத்தில் மழை வாய்ப்பு</u>




வங்கக் கடலில் அந்தமான் தீவுகளுக்கு அருகில் காற்றழுத்த தாழ்வு மண்டலம் உருவாகியுள்ளது என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இது குறித்து வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் கூறியது: வடக்கு அந்தமான் கடல் பகுதியில் காற்றழுத்த தாழ்வு மண்டலம் செவ்வாய்க்கிழமை காலை உருவானது. இது போர்ட் பிளேருக்கு கிழக்காக 250 கி.மீ. தூரத்தில் நிலை கொண்டுள்ளது. இது ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலமாகவும், பின்னர் புயலாகவும் மாறும். இது வடமேற்கு திசையில் நகர்ந்து வருகிறது. இதனால் தமிழகத்துக்கு எந்தவித பாதிப்பும் இருக்காது. அதேவேளையில் ஆந்திர மாநிலம் அருகில் வளி மண்டல மேல் அடுக்கு சுழற்சி ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக தமிழகத்தில் மழை பெய்யும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர். வானிலை முன்னறிவிப்பு: தமிழகம் மற்றும் புதுவையின் சில இடங்களில் மழையோ இடியுடன் கூடிய மழையோ புதன்கிழமை பெய்யும். சென்னையை பொருத்தவரையில் வானம் பொதுவாக மேகமூட்டமாக இருக்கும். சில இடங்களில் மழை பெய்யும். இந்த

நிலையில் செவ்வாய்க்கிழமை காலை வரையிலான 24 மணி நேரத்தில் தருமபுரி மாவட்டம் மாரண்டஹள்ளியில் 80 மி.மீ. மழை பெய்துள்ளது. பாபநாசத்தில் 70 மி.மீ. மழையும், குமாரபாளையத்தில் 60 மி.மீ. மழையும் பெய்துள்ளது. மணிமுத்தாறு, விழுப்புரம் (50 மி.மீ.), பவானி, திருமங்கலம் (40 மி.மீ.), செய்யாறு, சங்ககிரி, செங்கம், அரக்கோணம், ராமநாதபுரம் (30 மி.மீ.), கிருஷ்ணகிரி, செஞ்சி, ஸ்ரீவில்லிபுத்தூர், சாத்தனூர் அணை, பாம்பன், மேலூர், தருமபுரி, அரூர் (20 மி.மீ.), திருவண்ணாமலை, மதுரை, ஆம்பூர், பாலக்கோடு, விருதுநகர், பெருந்துறை, ஈரோடு, புதுச்சேரி, பேராவூரணி, ஆத்தூர், காஞ்சிபுரம் (10 மி.மீ.) ஆகிய இடங்களிலும் மழை பெய்துள்ளது.

## நாகை துறைமுகத்தில் 1ம் எண் புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்றம்

நாகப்பட்டினம், பாம்பன் துறைமுகங்களில் 1ம் எண் புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்றப்பட்டுள்ளது. மேலும் புதுச்சேரி துறைமுகத்திலும் 1ம் எண் புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்றப்பட்டுள்ளது.

## பூந்தமல்லியில் பலத்த மழை

பூந்தமல்லி, அதன் சுற்றுப்புறங்களில் இடி, மின்னலுடன் செவ்வாய்க்கிழமை பலத்த மழை பெய்ததால் மக்கள் மகிழ்ச்சியடைந்தனர். பூந்தமல்லி உள்ளிட்ட பகுதிகளில் கடுமையான வெயில் தாக்கி வந்த சூழ்நிலையில் செவ்வாய்க்கிழமை மதியம் பூந்தமல்லி, குன்றத்தூர், போரூர் மற்றும் அதன் சுற்றுப்புறப் பகுதிகளில் கருமேகம் சூழ்ந்து, இடி, மின்னலுடன் கூடிய பலத்த மழை பெய்தது. இதனால் வெப்பம் தணிந்து குளிர்ச்சி நிலவியதால் பொதுமக்கள் மகிழ்ச்சியடைந்தனர்.

## மானிய விலையில் பயறு வகை விதைகள்

பழனி வட்டாரத்தில் மானிய விலையில் பயறு வகை விதைகள் வழங்கப்படும் என, வேளாண்மைத் துறை தெரிவித்துள்ளது. இது

குறித்து, பழனி வேளாண்மை உதவி இயக்குநர் சாந்தாமணி தனது அறிக்கையில் கூறியிருப்பது: பழனி வட்டாரத்தில் தற்போது பருவமழை பெய்யத் தொடங்கியுள்ள நிலையில், மானாவாரி நிலங்களில் குறைந்த வயதுடையதும், குறைந்த சாகுபடி செலவில் அதிக வருவாய் பெற்றிடவும், பயறு வகை சாகுபடி ஏற்றது. இதை சாகுபடி செய்திட இதுவே ஏற்ற தருணமாகும். எனவே, மானாவாரி சாகுபடி செய்திடும் விவசாயிகள், பழனி வட்டார வேளாண்மை விரிவாக்க நிலையத்தில், பயறு வகை விதைகளை 50 சதம் மானியத்தில் பெற்று பயனடையலாம்.

ஆயக்கட்டு பாசன சாகுபடிக்கேற்ப குறுகிய கால வயதுடைய நெல்லான ஆடுதுறை (2) 45, தற்போது பழனி மற்றும் பாப்பம்பட்டி, நெய்க்காரபட்டி துணை விரிவாக்க மையங்களில் இருப்பு வைக்கப்பட்டு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. பழனி வட்டாரத்திலுள்ள விவசாயிகள் தங்கள் பகுதி உதவி விவசாய அலுவலர்களிடம் மானிய விண்ணப்பம் பெற்று, 50 சதவீத மானிய விலையில் பயறு விதைகளை பெற்று பயனடையலாம் எனத் தெரிவித்துள்ளார்.

## கொடைக்கானலில் மழை: ஏரி நிரம்பியது

கொடைக்கானலில் பெய்து வரும் மழையால் ஏரி நிரம்பியதை அடுத்து, பொதுமக்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். கொடைக்கானலில் கடந்த சில தினங்களாக விட்டு விட்டு மழை பெய்து வருகிறது. இதனால், கொடைக்கானல் பகுதியிலுள்ள நீர்வரத்து ஓடைகள், அருவிகளில் தண்ணீர் பெருக்கெடுத்துள்ளது. மேலும், நீர்மட்டம் குறைவாக இருந்த ஏரி, தற்போது நிரம்பி உபரி நீர் வெளியேறி வருகிறது. இதனால், பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். மேலும், செவ்வாய்க்கிழமை மாலை சுமார் அரை மணி நேரம் மிதமான மழை பெய்தது. இதனால், பொதுமக்கள் மற்றும் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர்.

## தேவகோட்டையில் கனமழை

தேவகோட்டை மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளில் பல நாள்களுக்குப்பிறகு கனமழை பெய்ததால் மக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். தேவகோட்டையில் கடந்த சில நாள்களாக கடுமையான வெயில் வாட்டி வதைத்தது. இந்நிலையில் செவ்வாய்க்கிழமை மாலை தேவகோட்டை பேருந்து நிலையம், ஒத்தக்கடை, ராம்நகர், சுற்றுவட்டார பகுதிகளில் கனமழை பெய்தது. கனமழையின் காரணமாக நகரின் பல்வேறு பகுதிகளில் சாலைகளில் மழைநீர் பெருக்கெடுத்து ஓடியது. குளிர்ச்சியான சூழ்நிலை நிலவுவதால் பொதுமக்கள் மற்றும் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

## எழுமாத்தூரில் ரூ. 12 லட்சத்திற்கு கொப்பரை ஏலம்

எழுமாத்தூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் தேங்காய் மற்றும் கொப்பரை ஏலம் நடைபெற்றது. எழுமாத்தூர் மற்றும் அதன் சுற்று வட்டாரப் பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் 344 மூட்டைகளில் 11 டன் எடையுள்ள கொப்பரையை விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர். இதில், முதல் தர கொப்பரை அதிகபட்ச விலையாக கிலோ ஒன்றுக்கு ரூ. 103.15- க்கும், குறைந்தபட்ச விலை ரூ. 97.65-க்கும், இரண்டாம் தர கொப்பரை அதிகபட்ச விலை கிலோ ஒன்றுக்கு ரூ. 98.95-க்கும், குறைந்தபட்ச விலை ரூ. 68.50-க்கும் என மொத்தம் ரூ. 10 லட்சத்து 37 ஆயிரத்து 949-க்கு ஏலம் நடைபெற்றது. இதே போல, 6 டன் எடையுள்ள 17 ஆயிரத்து 998 தேங்காய்கள் கொண்டு வரப்பட்டது. இதில், அதிகபட்ச விலையாக டன் ஒன்றுக்கு ரூ. 28 ஆயிரத்து 378-க்கும், குறைந்தபட்ச விலையாக ரூ. 23 ஆயிரத்து 701-க்கும் ஏலம் போனது. இதில், மொத்தம் ரூ. 1லட்சத்து 85 ஆயிரத்து 416 என மொத்தம் ரூ. 12 லட்சத்து 23 ஆயிரத்து 365-க்கு கொள்முதல் நடைபெற்றது.

## தூத்துக்குடி மாவட்டத்தில் மழை

எட்டயபுரம்,அக். 7: எட்டயபுரம், ஆறுமுகனேரி, காயல்பட்டினம் பகுதிகளில் செவ்வாய்க்கிழமை மாலையில் இடி, மின்னலுடன் கூடிய பலத்த மழை பெய்தது. எட்டயபுரம் பகுதியில் செவ்வாய்க்கிழமை காலையில் வெப்பத்தின் தாக்கம் சற்று அதிகமாகவே இருந்தது. பிற்பகலில் வானம் மேகமூட்டமாக காணப்பட்டதையடுத்து பிற்பகல் 3 மணியளவில் இடி, மின்னலுடன் பரவலாக மழை பெய்யத் தொடங்கியது. சுமார் 20 நிமிடங்கள் வரையிலும் நீடித்துப் பெய்த மழையினால் தெருக்களில் ஒருசில இடங்களிலும்,சாலையோரங்களிலும் மழைநீர் பெருக்கெடுத்து ஓடியது. தொடர்ந்து, மாலையிலும் குளிர்ச்சியான காற்று வீசியதோடு, மழைத் தூறலும் பெய்தது. இதே போல நடுவிற்பட்டி, கான்சாபுரம், ராமனூத்து, இளம்புவனம்,பிதப்புரம், மாசார்பட்டி உள்ளிட்ட எட்டயபுரம் வட்டாரப் பகுதிகள் உள்ளிட்ட சில இடங்களிலும் மாலை நேரத்தில் தொடர்ந்து பரவலாக மழை பெய்தது.

## கடலூர் துறைமுகத்தில் 1ஆம் எண் புயல் எச்சரிக்கைக் கூண்டு

வங்கக் கடலில் அந்தமான் அருகே உருவாகியுள்ள காற்றழுத்தத் தாழ்வு நிலையை அடுத்து, கடலூர் துறைமுகத்தில் 1ஆம் எண் புயல் எச்சரிக்கைக் கூண்டு செவ்வாய்க்கிழமை மாலை ஏற்றப்பட்டது. மீனவர்கள் ஆழ் கடலுக்குச் சென்று மீன் பிடிக்க வேண்டாம் என்றும், கடலோரப் பகுதியில் வசிக்கும் மீனவர்கள் மற்றும் பொது மக்கள் பாதுகாப்பாக இருக்குமாறும் அதிகாரிகள் அறிவுறுத்தியுள்ளனர். முன்னதாக திங்கள்கிழமை இரவு கடலூர் பகுதிகளில் லேசான காற்றுடன் பரவலாக மழை பெய்தது. செவ்வாய்க்கிழமை பிற்பகல் முதல் வானம் மேக மூட்டமாக இருந்தாலும் மழை இல்லை.

## புதுவையில் பலத்த மழை

புதுச்சேரியில் திங்கள்கிழமை இரவு தொடங்கி மழை விடிய, விடிய பெய்தது. புதுவையில் கடந்த 2 வாரங்களாக தொடர்ந்து கடும் வெப்பம் நிலவி வந்தது. இந்நிலையில் திங்கள்கிழமை இரவு 11 மணியளவில் பலத்த இடியுடன் தொடர்ந்து மழை பெய்தது. செவ்வாய்க்கிழமை அதிகாலை வரை விடிய விடிய பெய்து கொண்டே இருந்தது. இதனால் பல பகுதிகளிலும் மழை நீர் வெளியேற முடியாமல் குளம்போல தேங்கி நின்றது. இதனால் பொதுமக்கள் பாதிக்கப்பட்டனர்.

தினமலர்

### இன்றைய வேளாண் செய்திகள்

## கீரையில் மாதம் ரூ.45 ஆயிரம்: சிவகங்கை சாதனை விவசாயி



முன்னோர்களிடம் கீரையை உணவில் அதிகம் சேர்க்கும் பழக்கம் இருந்தது. இதற்காக, வீட்டு தோட்டங்களிலேயே முருங்கை, அகத்தி, சிறுகீரை, அரைக்கீரை, பொன்னாங்கண்ணி கீரைகளை பயிரிட்டனர். காலப்போக்கில், வீட்டு தோட்டங்கள் மறைந்து, உணவில் கீரை சேர்க்கும் பழக்கம் குறைந்தது. இதனால் உடலில் பாதிப்பு அதிகரித்தது. டாக்டர்களின் ஆலோசனைப்படி, இன்றைக்கு "வாக்கிங்' செல்வோர், வீட்டிற்கு திரும்பும் போது, "கீரை கட்டுகளை' வாங்கிச் செல்கின்றனர். அதற்கேற்றார் போல், சிவகங்கை அருகே மேலசாலூரை சேர்ந்த விவசாயி பி.போஸ், தனது நிலத்தில் முற்றிலும் கீரை பயரிட்டு, லாபம்

பார்த்து வருகிறார். அவர் கூறியதாவது; கடும் வறட்சிக்கு இடையே கிணற்றில் உள்ள தண்ணீரை வைத்து, கீரை பயிரிட்டு வருகிறேன். நான் மட்டுமின்றி, எனது சகோதரர்களும் சேர்ந்து, ஒட்டு மொத்தமாக 1.5 ஏக்கரில் கீரை நடவு செய்துள்ளோம். நான் மட்டுமே 50 சென்ட்டில்,200 பாத்தி அமைத்துள்ளேன். ஒரு பாத்திக்கு 50 கிராம் விதையை தூவ வேண்டும். விதை தூவிய பின், தினமும் தண்ணீர் பாய்ச்சுவதோடு, களையெடுப்பு, உரம், பூச்சி மருந்து தெளித்து, "கண் இமையை' பராமரிப்பது போல் முறையாக கவனித்து வரவேண்டும். ஒரு மாதத்திற்கு பின் கீரை நன்கு வளர்ந்து, அறுவடைக்கு தயாராகும். இங்கு தண்டுகீரை, அரைக்கீரை, சிறு கீரை, பாலைக்கீரை, பருப்பு கீரை, வெந்தயகீரை, புளிச்சகீரை, பொன்னாங்கண்ணி கீரை, மஞ்சள் கரிசலாங்கண்ணி கீரை போன்று, மருத்துவ குணமுள்ள கீரைகளை அதிகளவில் பயிரிட்டுள்ளேன். மாதம் ரூ.45 ஆயிரம்: நாள் ஒன்றுக்கு, 300 முதல் 500 கட்டு (ஒரு கட்டு 250 கிராம்)அறுவடை செய்து விற்பேன். ஒரு கட்டு ரூ.5க்கு விற்கிறது. இதன் மூலம், நாள் ஒன்றுக்கு ரூ.2,500 வருவாய் கிடைக்கும். உரம், பூச்சி மருந்து, விவசாய கூலியாட்கள் சம்பளம் என்ற விகிதத்தில் ரூ.1,000 செலவு போக, தினமும் கீரை மூலம் ரூ.1,500 வீதமும், மாதம் ரூ.45 ஆயிரம் வரை லாபம் கிடைக்கும். நல்ல மழை பெய்தால் இன்னும் அதிக நிலங்களில் கீரை பயிரிடலாம், என்றார். ஆலோசனைக்கு- 97869 48567. **என்.வெங்கடேசன், சிவகங்கை.**

## <u>சின்ன சின்ன செய்திகள்</u>



பருத்தி இரகம் எஸ்.வி.பி.ஆர்.4 - கோடை இறவை நெல் தரிசு பகுதிகளுக்கு ஏற்ற உயர் விளைச்சல் இரகம் தற்போது கோடை இறவைப் பட்டத்தில் எஸ்.வி.பி.ஆர்.2 ரகமும், நெல் தரிசு பருத்திப் பகுதிகளில் குறுகிய கால எம்.சி.யு.7, எஸ்.வி.பி.ஆர்.2, எஸ்.வி.வி.ஆர்.3 இரகங்கள் நல்ல மகசூல் கொடுத்தாலும் இந்த இரகங்களின் பஞ்சு தற்போதைய பெரும்பாலான மில் தேவையான 40 ஆம் நம்பர் நூல் நூற்க ஏற்றதாக இல்லை. எனவே திருவில்லிபுத்தூர் பருத்தி ஆராய்ச்சி நிலையம், எஸ்.வி.வி.ஆர்.4 என்னும் உயர்தர, நடுத்தர இழைநீளம் (27.8 மிமீ) கொண்ட உயர் விளைச்சல் பருத்தி இரகத்தை 2009 ஆம் ஆண்டு வெளியிட்டுள்ளது. இந்த இரகம் நடப்பு சாகுபடியிலுள்ள எஸ்.வி.பி.ஆர்.2, எஸ்.வி.பி.ஆர்.3, எம்.சி.யு.7 இரகங்களை விட அதிக விளைச்சல் தருவதுடன் எக்டருக்கு 20 குவிண்டால் பருத்தி விளைச்சலை கொடுக்கிறது. நடுத்தர வயதுடைய இந்த இரகம் 150 நாட்களில் விளையக் கூடியது. மேலும் மறுதழைவிற்கு ஏற்ற இரகமாக இருப்பதால் முதல் அறுவடை 150 நாட்களில் முடிந்தவுடன், காவிரி டெல்டா பாசனப் பகுதிகளில் குறுவை நீர்வரத்து இல்லாத போதும், ஒரு போக சம்பா பாசனப்பகுதிகளிலும் மறுதழைவிற்கு விட்டு இரண்டாம் அறுவடையில் எக்டருக்கு 1000 கிலோ பருத்தி மகசூல் கிடைக்கிறது. எம்.சி.யு.5 இரகத்துடன் ஒப்பிடும் நிலையில் இருப்பதால் நல்ல விலை கிடைக்கிறது. தகவல்: பருத்தி ஆராய்ச்சி நிலையம், திருவில்லிபுத்தூர். மானாவாரிக்கேற்ற மாற்றுப் பயிர்கள் : சிறுதானியம் பயிர்களான குதிரைவாலி, வரகு, பனிவரகு, தினை, சாமை முதலிய பயிர்களை நம் முன்னோர்களில் பாரம்பரிய பயிராக பயிரிடப்பட்டு வந்தன. இப்பயிர்கள் தற்போதுள்ள மாறிவரும் பருவ நிலைக்கு ஏற்றவை.மேலும் இது தானியங்களில் ஆரோக்கிய உணவுக்கான தாதுப்பொருட்கள், நார்ச்சத்து மற்றும் வைட்டமின்கள் அதிக அளவில் உள்ளன. மானாவாரி சாகுபடிக்கேற்ற பயிர்த்திட்டம் : மானாவாரி செம்மண் நிலங்களுக்கு -

பருவம் வடகிழக்கு பருவமழை காலம். விதைப்புக்காலம் - அக்டோபர் இரண்டாவது வாரம். பயிர்த்திட்டம் - தானியப்பயிர் திட்டம் - நிலக்கடலை, எள், தானியச்சோளம், தீவனச்சோளம். ஊடுபயிர்த்திட்டம் - நிலக்கடலை + மொச்சை / துவரை / தட்டப்பயறு. ஒருங்கிணைந்த பண்ணையம் - 5 ஏக்கர் பரப்பு ஒருபருவப்பயிர் (3.5 ஏக்கர்) - பருத்தி/ சோளம்/ கம்பு/ மக்காச்சோளம்/ சூரியகாந்தி

சிறு தானியங்கள் / பயறுவகைப் பயிர்கள் மற்றும்பயறுவகைப் பயிர்கள் சார்ந்த ஊடுபயிர் திட்டம் பழப்பயிர்கள் (0.5 ஏக்கர்) - சப்போட்டா / நெல்லி/சீத்தா/புளி தீவனப்பயிர்கள் (0.5 ஏக்கர்) - சுபாடில் / அசத்தி / வேம்பு மற்றும் வேலிமசால் / கொழுக்கட்டைப்புல் சார்ந்த ஊடுபயிர்கள் கால்நடை வளர்ப்பு- கோழி வளர்ப்பு, கறவை மாடுகள் வளர்ப்பு மற்றும் வெள்ளாடு வளர்ப்பு 5 பெட்டை + 1 கிடா (தகவல் : மண்டல ஆராய்ச்சி நிலையம், அருப்புக்கோட்டை). பயறுவகைப்பயிர்களில் பூச்சி மேலாண்மை: காய்ப்புழுக்கள் - டைகுளோஸ்வாஸ் 400 மிலி / ஏக்கர் அல்லது இண்டாக்ஸா கார்ப் 200 மிலி / ஏக்கர் அல்லது குளோர்ட்ரேனிலிப்ரோல் 60 மிலி / ஏக்கர். **சிறுதானியம் - இரகம் - வயது நாட்கள் - விதையளவு (கிலோ / ஏக்கர்) - இடைவெளி (செ.மீ) - தானிய மகசூல் கிலோ / ஏக்கர்** வரகு - ஏ.பி.கே.1 - 100 - 5 - 45ஜீ10 - 1000 பனிவரகு- கோ (பிவி) 5-70 - 4-22. 5ஜீ 7 - 700 தினை - கோ (தி)7 - 90 - 5 - 22ஜீ10 - 700 சாமை - கோ.4 - 80 - 5 - 22ஜீ10 - 1100 குதிரைவாலி - கோ(கேவி)2 - 95 - 4 - 22.5ஜீ10 - 800 தகவல் : மானாவாரி வேளாண்மை ஆராய்ச்சி நிலையம், செட்டிநாடு. **- டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்.**

# <u>வறட்சியிலும் அமோக லாபம்: நெல் சாகுபடியில் சாதனை</u>



ராமநாதபுரம் மாவட்டத்தில் மூன்று ஆண்டுகளாக பருவமழை பொய்த்துப்போனாலும், "கைகொடுத்த' சாரல் மழை ஈரத்தில், இயற்கை உரங்களை பயன்படுத்தி நெல் சாகுபடியில் 82 ஆயிரத்து 500 ரூபாய் லாபம் கண்டுள்ளார் ஆர்.எஸ்.மங்கலம் அருகேயுள்ள விவசாயி. கடந்த ஆண்டில் திருவாடானை தாலுகாவிற்கு உட்பட்ட சுற்றுப்புற பகுதிகள் அனைத்தும் பயிரிடப்பட்ட நெல், போதிய மழையின்றி சாவியாகி வைக்கோல் கூட தேறவில்லை. ஆர்.எஸ்.மங்கலம் ஒன்றியம் குமிழேந்தலை சேர்ந்த விவசாயி ராஜகோபால், முற்றிலுமாக ரசாயன உரங்களை தவிர்த்தார். அவ்வப்போது பெய்த சாரல் மழையின் உதவியோடு மண்புழு உரம், மாட்டுச்சாணம், ஆட்டு புழுக்கைகளை உரமாக இட்டார். வறட்சி நிலவிய நேரத்திலும் இவரது வயலில் உள்ள நெல் பயிர்கள் கருகாமல் மகசூலை எட்டியது. நான்கு ஏக்கரில் 50 மூடைகள்(ஒரு மூடை 60 கிலோ) நெல் கிடைத்தது. இவர் கூறியதாவது: எப்போதுமே விதைப்பிற்கு முன், மூன்று முதல் ஐந்து முறை நன்கு ஆழமாக நிலத்தை உழுதுவிட்டு, நெல்லை(டீலக்ஸ் பொன்னி ரகம்) மேலோட்டமாக விதைப்பேன். இயற்கை உரங்களோடு ஏக்கருக்கு 2 கிலோ வீதம் அசோஸ்பைரில்லம் மற்றும் பாக்டிரியாபேஜ் ஆகியவை இட்டதால் நெல் கருகவில்லை. ஒரு மூடை ரூ.1650 வீதம், 50 மூடை நெல்லை 82 ஆயிரத்து 500க்கு விற்றேன். மிஞ்சிய வைக்கோலையும் ரூ.20 ஆயிரத்திற்கு விற்று, இதிலேயே சாகுபடி செலவையும்

ஈடுகட்டிவிட்டேன். மகசூல் நேரத்தில் லேசான மழை பெய்திருந்தால், ஏக்கருக்கு 50 மூடை வீதம் 200 மூடைகள் கிடைத்திருக்கும். அனைத்து விவசாயிகளும் அகலமாக உழுவதை விட, ஆழமாக உழ வேண்டும். இயற்கை உரங்களை பயன்படுத்தினால் லாபம் அதிகம் கிடைக்கும், என்றார். **-கார்த்திகை ராஜா, ஆர்.எஸ்.மங்கலம்.**

## <u>தர்மபுரி மாவட்டத்தில் தொடர்ந்து பலத்த மழை</u>

தர்மபுரி: தர்மபுரி மாவட்டத்தில், இரண்டு நாட்களாக தொடர்ந்து பெய்த கன மழையால், விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். தர்மபுரி மாவட்டத்தில், சில ஆண்டுகளாக, தென்மேற்கு பருவமழை எதிர்பார்த்த அளவு பெய்யாமல் விவசாயிகளையும், பொதுமக்களையும் ஏமாற்றி வந்தது. இந்நிலையில், விவசாயிகள், இறவை பாசனம் மற்றும் மானாவரி, ஏரி, குளம், அணை பாசன வசதியை நம்பி, நெல் உள்ளிட்ட பயிர்களை சாகுபடி செய்தனர். ஆனால், இந்தாண்டும், தென்மேற்கு பருவமழை எதிர்பார்த்தபடி பெய்யவில்லை. இதனால், நல்லம்பள்ளியை அடுத்த கோவிலூர் உட்பட, மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் சாகுபடி செய்யப்பட்டிருந்த நெல் உள்ளிட்ட பயிர்கள் பாதிக்கப்பட்டது. பயிர்களை காக்க, பல விவசாயிகள் விலைக்கு தண்ணீர் வாங்கி, லாரிகள் மூலம் தண்ணீர் கொண்டு வந்து, பாசனம் செய்யும் நிலை ஏற்பட்டது. இந்நிலையில், இரண்டு நாட்களாக தர்மபுரி உட்பட மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் தொடர்ந்து மழை பெய்து வருகிறது. இதனால், வறட்சியில் வாடி வந்த பயிர்கள் மீண்டும் உயிர் பிடித்து வருவதால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். மேலும், சாகுபடி செய்யப்பட்டுள்ள பயிர்களுக்கு களை எடுத்தல் மற்றும் உரம் ஈடுதல் உள்ளிட்ட பணிகளில் ஆர்வம் காட்டி வருகின்றனர். இரண்டு நாட்ளாக பெய்து வரும் மழையின் காரணமாக, தர்மபுரி உட்பட பல்வேறு பகுதிகளில், குளுமையான சூழ்நிலை ஏற்பட்டுள்ளதால், பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். தர்மபுரி

மாவட்டத்தில், நேற்று முன்தினம் அதிகபட்சமாக, மாரண்டஹள்ளியில், 83 மி.மீ., மழையளவு பதிவானது. தர்மபுரியில், 20 மி.மீ., அரூரில், 17.30 மி.மீ., பாலக்கோட்டில், 13 மி.மீ., கலெக்டர் அலுவலகத்தில், 3 மி.மீ., மழையளவு பதிவானது.

**<u>கொண்டை கடலையில் சாகுபடி வேளாண் அதிகாரி வேண்டுகோள்</u>**

தர்மபுரி: "தர்மபுரி மாவட்டத்தில், அனைத்து பகுதிகளிலும் பருவமழை பெய்துள்ளது. பனிக்கடலை என்று அழைக்கப்படும், கொண்டைக்கடலை சாகுபடி செய்ய இதுஏற்ற தருணம் என, தர்மபுரி மாவட்ட உழவர் பயிற்சி நிலைய வேளாண்மை துணை இயக்குனர் பாஸ்கர் கூறியுள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கை: கொண்டை கடலை சாகுபடி செய்ய, அக்டோபர், நவம்பர் மாதம் ஏற்றதாகும். இப்பயிர், குறைந்த நீர் தேவையை கொண்டு, பனியிலேயே வளரக்கூடியது. கொண்டைக் கடலை பயிர் செய்ய களிமண் பாங்கான நிலம் உகந்தது. கோ, 3, 4 ரகங்கள் பயிரிட ஏற்றதாகும். ஒரு ஏக்கருக்கு, கோ 3 ரகமாக இருந்தால், 36 கிலோவும், கோ 4, ரகமாக இருந்தால், 30 கிலோவும் விதை போதுமானது. விதைப்பதற்கு 24 மணி நேரத்துக்கு முன், ஒரு கிலோ விதையுடன், இரண்டு கிராம் கார்பெண்டாசிம் அல்லது நான்கு கிராம் திரம் அல்லது இரண்டு கிராம் கார்பன்டாசினம் அல்லது நான்கு கிராம் டிரைக்கோடெர்மா விரிடி அல்லது 10 கிராம் சூடோமோனாஸ் கலந்து 24 மணி நேரம் வைத்திருந்து, பிறகு நுண்ணுயிர் உரமான ரைசோபியம் இரண்டு பாக்கெட், மற்றும் பாஸ்போ பாக்டீரியா இரண்டு பாக்கெட்டையும் ஆறிய அரிசி கஞ்சியுடன் கலந்து விதை நேர்த்தி செய்து, நிழலில் உலர்த்தி வைக்க வேண்டும். செடிக்கு செடி, 30 செ.மீட்டர் இடைவெளியும், பயிருக்கு, பயிர், 10 சென்டி மீட்டர் இடைவெளியும் இருக்குமாறு, விதைப்பு செய்ய வேண்டும். விதைப்பதற்கு முன், மானாவாரி பயிருக்கு அடியுரமாக ஏக்கருக்கு, ஐந்து

டன் மக்கிய தொழுஉரம், ஐந்து கிலோ தழைச்சத்து தரவல்ல 10 கிலோ யூரியா, 10 கிலோ மணிச்சத்து தரவல்ல 62 கிலோ சூப்பர் பாஸ்பேட் மற்றும் ஐந்து கிலோ சாம்பல் சத்து தரவல்ல 10 கிலோ பொட்டாஷ் உரங்களை இட வேண்டும். இப்பயிர், அதிக பராமரிப்பு செலவில்லாமல் வருமானத்தை தரக்கூடியது. இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

**அரசு விதைப்பண்ணை மூலம் 350டன் விதை நெல் விற்பனை**

ஈரோடு: ஈரோடு மாவட்டத்தில், 14 யூனியனில் உள்ள வேளாண் விரிவாக்க மையங்கள் மூலம், நடப்பாண்டில், 350 மெட்ரிக் டன் விதைகள் விற்பனை செய்யப்பட்டுள்ளது. இதுகுறித்து, வேளாண் அலுவலர் கலைச்செல்வி கூறியதாவது: ஈரோடு மாவட்டத்தில், நடப்பு, 2014-15ம் ஆண்டில் மட்டும், 350 மெட்ரிக் டன் விதைகள் விற்பனை செய்யப்பட்டுள்ளது. கிலோவுக்கு, பத்து ரூபாய் வரை, மானியம் வழங்கப்படுவதால், விவசாயிகள், மானியத்திட்டத்தில், பயனடைந்து வருகின்றனர். ஈரோடு மாவட்டத்தில், உற்பத்தி செய்யப்படும் விதைகள், அதிக வீரிய சக்தி கொண்டவையாக இருப்பதால், ஈரோடு மாவட்ட விதைப்பண்ணைகளில் உற்பத்தி செய்யப்படும் விதைகளுக்கு, மற்ற மாவட்டங்களில் கிராக்கி அதிகம். இந்தாண்டு மட்டும், 56 மெட்ரிக் டன், விதைகள், வெளி மாவட்டங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. ஈரோடு மாவட்டத்தில் உள்ள, அரசு விதைப்பண்ணைகளில், உற்பத்தி செய்யப்படும் ஆதார விதைகள், அரசு சான்று பெற்றவை. இங்குள்ள விதைப்பண்ணைகளில் மட்டும், 96 ஏக்கரில், ஆதார விதை உற்பத்தி செய்யப்படுகிறது. இதில், விவசாய நிலங்கள் உள்பட மொத்தம், 500 ஏக்கர் பரப்பளவில், ஆதார விதை நெல், இந்தாண்டு உற்பத்தி செய்யப்படுகிறது. பொதுவாக, பாசிப்பயிறு, தட்டை மற்றும் உளுந்து போன்ற பயிறு வகை விதைகள், 90 நாட்களிலும், நெல் விதை, 110 முதல், 150 நாட்களிலும், நிலக்கடலை, 105 முதல், 125 நாட்களிலும்,

சிறுதானியங்களான ராகி, கம்பு உள்ளிட்டவை, 105 முதல், 110 நாட்களிலும், எள் விதை, 90 நாளிலும், அறுவடை செய்யப்படுகிறது. இவ்வாறு அவர் கூறினார்.

**<u>உழவர் சந்தை காய்கறி வரத்து அதிகரிப்பு</u>**

ஈரோடு: ஈரோடு சம்பத் நகர் உழவர் சந்தையில், காய்கறி விற்பனை, கடந்த ஒரு வாரமாக அதிகரித்துள்ளது. புரட்டாசி மாதம் என்றாலே, பலரும் விரதம் இருந்து, பல்வேறு வழிபாடுகளில் இறங்குவர். தவிர, புரட்டாசியில் எப்போதும் இல்லாத அளவுக்கு, காய்கறி விலை சற்று கூடுதலாகவே விற்கும். அந்த மாதம், அசைவ பிரியர்களும்கூட, காய்கறிகளை அதிகம் விரும்பி உண்பர். அதற்கேற்ப, காய்கறி வரத்தும் அதிகரிக்கும். கடந்த, ஒரு வாரமாகவே, காய்கறி விலை ஏற்ற, இறக்கம் இன்றி காணப்படுகிறது. இம்மாதத்தில், விலை அதிகமாக விற்பனை செய்ய வாய்ப்புள்ளதாக கருதி, காய்கறி சாகுபடி செய்திருந்த விவசாயிகள், மற்றும் விற்பனைக்காக வரும் வியாபாரிகளும் எதிர்பார்த்தனர். ஆனால், பெரிய அளவில் விலையில் உயர்வு இல்லாததால், விவசாயிகளும், வியாபாரிகளும் ஏமாற்றம் அடைந்தனர். நேற்று, சம்பத் நகர் உழவர் சந்தையில், தக்காளி, பத்து முதல், 11 ரூபாய்க்கும், கேரட், பீன்ஸ், பீட்ரூட் போன்றவை, 30 ரூபாய்க்கு மேல் விற்பனை செய்யப்பட்டது. கடந்த வாரம், இரண்டாம் தேதி முதல், சம்பத் நகர் உழவர் சந்தையில், மொத்த காய்கறிகள், ஒரு லட்சத்து, 36 ஆயிரத்து, 665 கிலோ காய்கள் வரத்தானது. அவற்றை, 1,081 விவசாயிகள் கொண்டு வந்து விற்பனை செய்தனர். 23 ஆயிரத்து, 630 வாடிக்கையாளர்கள் காய்கறிகள் வாங்கி சென்றனர். 35 லட்சத்து, 97 ஆயிரத்து 250 ரூபாய்க்கு காய்கறிகள் விற்கப்பட்டன. புரட்டாசியை தொடர்ந்து, ஐப்பசி முதல், சபரி மலை சீசன் துவங்குவதால், மீண்டும் காய்கறி வரத்தும், விலையும் உயரும் என எதிர்பார்க்கின்றனர்.

## அந்தியூர் பகுதியில் பரவலாக மழை பதிவு 5 ஆண்டுக்குப்பின் நிரம்பிய குளம்

அந்தியூர்: அந்தியூர் அடுத்த வெள்ளித்திருப்பூர், மாத்தூர், ரெட்டியபாளையம், குரும்பபாளையம், சனிச்சந்தை, தொப்பபாளையம் உள்ளிட்ட பகுதியில், நேற்று மாலை இடி, மின்னலுடன் மழை பெய்தது. இப்பகுதியில் நிலவிய கடும் வறட்சியால் பாதிக்கப்பட்ட மானாவரி நிலத்தில் சாகுபடி செய்திருந்த, நிலக்கடலை, எள், சோளம் ஆகிய பயிர்கள், கருகிய நிலையில் காணப்பட்டது. கடந்த, பத்து நாட்களாக, பெய்து வரும் மழையால், அனைத்து பயிர்களும் உயிர் தப்பி, பச்சை பிடித்துள்ளது. இந்நிலையில் நேற்று பெய்த கனமழையால், விவசாய நிலங்களில், தண்ணீர் தேங்கி வருகின்றனர். அதேநேரம், நேற்று பெய்த மழையால், குரும்பபாளையம் பகுதியில், சாகுபடி செய்திருந்த, ஒரு ஏக்கர் பரப்பிலான சோளப்பயிர், அடியோடு சாய்ந்தது. அத்தாணி அடுத்த பொன்னாச்சி அம்மன் குளம், கடந்த ஐந்தாண்டுக்குப்பின், நேற்றைய மழையால் நிரம்பியது. இதனால், இப்பகுதியில் நிலத்தடி நீர் மட்டம் உயர்வதுடன், பாசனத்துக்கும் இந்நீர் பயன்படும்.

## ஊட்டியில் தொடரும் மழையால் உருளை கிழங்கு விளைச்சல் 'ஜோர்'

ஊட்டி : ஊட்டியில், தொடர்ந்து பெய்யும் மழையால், உருளைக் கிழங்கு விவசாயம் செழிப்படைந்துள்ளது. நீலகிரி மாவட்டம் ஊட்டியில், சில நாட்களாக பரவலாக மழை பெய்து வருகிறது. ஊட்டி அருகேயுள்ள கப்பத்தொரை, எமரால்டு, குருத்துக்குளி, ஆருகுச்சி பகுதிகளில், அதிகளவு உருளைக் கிழங்கு விவசாயம் மேற்கொள்ளப்படுகிறது. தொடர் மழை, குளிர்ந்த காலநிலை போன்றவை, உருளைக் கிழங்கு விவசாயத்துக்கு ஏதுவாக இருப்பதால், உருளைக் கிழங்கு தோட்டங்கள், பசும் போர்வை போர்த்தியது போல், செழிப்புடன் காட்சியளிக்கின்றன. விவசாயிகள் கூறுகையில்,'தற்போது, மேட்டுப்பாளையம் ஏலத்தில், ஒரு

கிலோ உருளைக் கிழங்குக்கு, 35 ரூபாய் விலை கிடைக்கிறது; வெளி மார்க்கெட்டில், 40 -- 46 ரூபாய் வரை விற்கப்படுகிறது. உருளைக் கிழங்கு அறுவடைக்கு தயாராக இன்னும் ஒரு மாத காலம் உள்ள நிலையில், இதே விலை நீடித்தால், விவசாயிகளுக்கு லாபம் கூடுதலாக கிடைக்கும். இருப்பினும், இந்த தொடர் மழை, கேரட் விவசாயத்தை பாதித்துள்ளது. கேரட் பயிர்கள் அழுகியுள்ளதால் விலையில் அடி விழுந்துள்ளது," என்றனர்.

## குன்னூரில் பெய்த மழை; மகிழ்ச்சியில் உள்ளூர் மக்கள்

குன்னூர் : குன்னூரில் நேற்று மதியம் பெய்த கன மழையால் மக்கள் மகிழ்ச்சியடைந்தனர். குன்னூர் மற்றும் சுற்றுப்புற பகுதிகளில் தொடர்ந்து வறட்சி நிலவிய நிலையில், கடந்த சில நாட்களாக இரவு நேரத்தில் மட்டும் மழை பெய்து வந்தது. இந்நிலையில், நேற்று காலை வெயிலின் தாக்கம் அதிகமாக இருந்த நிலையில், பகலில் மேகமூட்டத்துடன் கூடிய காலநிலை நிலவியது. மதியம் 12:45 மணியில் இருந்து 1:45 மணி வரை கன மழை பெய்தது. கடந்த சில நாட்களாக பெய்த மழையால், ரேலியா அணையில் 37 அடி உயரம் நீர்மட்டம் உயர்ந்துள்ளது. ஜிம்கானா நீர்தேக்கத்தில் முழு கொள்ளளவை எட்டியது. இதனால், குன்னூர் நகருக்கான குடிநீர் தட்டுப்பாடு குறைந்ததால், மக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## தென்னையில் பென்சில் பாயின்ட் நோய் தாக்குதல்

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி மாவட்டம், தென்பெண்ணை ஆற்றுப்படுகை பகுதியில் தென்னை மரங்களை, பென்சில் பாயின்ட் நோய் மீண்டும் வேகமாக தாக்கி வருகிறது. நோய் தாக்கிய மரங்களில், ஓலைகளின் அளவு குறைந்தும், மஞ்சள் நிறமாக மாறியும், மரங்களின் நுனியில் மரம் சிறுத்தும் காணப்படுகிறது. புதிய ஓலைகள் உருவாகாமல், 100 சதவீதம் தென்னை விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளது. நோயை கட்டுப்படுத்தும் முறைகள் குறித்து வேளாண் துறையினர் கூறியதாவது: கிருஷ்ணகிரி

மாவட்டத்தில், இரண்டாவது முறையாக தென்னையை "பென்சில் பாயின்ட்' நோய் தாக்கியுள்ளது. இந்நோயை கட்டுப்படுத்தாவிட்டால், தென்னை மரங்களின் நுனிகள் சிறுத்து அழிந்து விடும். இதை தடுக்க மரங்களுக்கு நுண்ணூட்ட சத்தை வேர் மூலம் வழங்க வேண்டும் நோய் தாக்கிய தோட்டங்களில், விவசாயிகள் ஒரு மரத்துக்கு யூரியா, ஒரு கிலோ, டி.ஏ.பி., ஒரு கிலோ, பொட்டாஷ், ஒன்றரை கிலோ, வேப்பம் புண்ணாக்கு இரண்டில் இருந்து, ஐந்து கிலோ வரையிலும், சூடோமோனோமாஸ், 200 கிராம், டிரைகோ டெர்மாவிரிடி, 200 கிராம் ஆகியவற்றை சேர்ந்து கலவையாக கலந்து ஆறு மாதத்திற்கு ஒரு முறை இட வேண்டும். இவ்வாறு இரண்டு அல்லது மூன்று முறை செய்தால் நோயை முற்றிலும் கட்டுப்படுத்தலாம். நோயை கட்டுப்படுத்துதல் குறித்து விவசாயிகள் அந்தந்த பகுதி வேளாண் அலுவலர்களை அணுகி தெரிந்து கொள்ளலாம். இவ்வாறு அவர்கள் கூறினர்.

## <u>திராட்சையில் சாம்பல் நோய் கட்டுப்படுத்த ஆலோசனை</u>

தேனி :திராட்சையில் பரவி வரும் சாம்பல் நோயை கட்டுப்படுத்த தோட்டக்கலைத்துறை ஆலோசனை வழங்கி உள்ளது. பனிக்காலம் தொடங்கி உள்ளதாலும், காற்றில் ஈரப்பதம் அதிகமாகி உள்ளதாலும் திராட்சை தோட்டங்களில் அடிச்சாம்பல் மற்றும் மேல்சாம்பல் நோய் தாக்கும் சூழ்நிலை உள்ளது. இந்த நோய் இலைகளை தாக்கும். பூங்கொத்தும், பிஞ்சுகளும் கூட பாதிக்கப்படுகிறது. இலையின் அடிப்பாகத்தில் வெண்மை நிற பூஞ்சான் வளர்ச்சி காணப்படும். அதற்கு நேர் எதிர் இலையின் மேல் பகுதியில் மஞ்சள் நிற புள்ளிகள் தோன்றும். நோயின் தன்மை தீவிரமடைந்த நிலையில் இலையின் மேல்பகுதியில் இலைப்புள்ளிகள் காணப்படும். புதிதாக முதிர்ந்த இலைகளையும் இந்நோய் தாக்கும். நோய் பாதித்த பாகங்கள் பழுப்பு நிறமாக மாறி செயலிழந்து விடும்.இந்நோயை கட்டுப்படுத்த போர்டோக்கலவை ஒரு சதவீதம்,மேன்கோசெப் 0.2 சதவீதம், ரிடோமில் 0.2சதவீதம், அலியட்டில்

0.2 சதவீதம் இவற்றில் ஏதாவது ஒன்றை கைத்தெளிப்பான் மூலம் நன்கு நனையும் வகையில் 15நாள் இடைவெளியில் தெளிக்க வேண்டும்,என தோட்டக்கலைத்துறை அதிகாரிகள் தெரிவித்து உள்ளனர்.

**மாவட்டத்தில் திருப்புவனத்தில் அதிக மழை நடவு பணிகளில் ஆர்வம் காட்டும் விவசாயிகள்**

சிவகங்கை:மாவட்டத்திலேயே,திருப்புவனம் தாலுகாவில் தொடர்ந்து அதிகபட்ச மழை பெய்து வருவதால்,வாழை,கத்தரி, மிளகாய் பயிரிடுவதில் விவசாயிகள் ஆர்வம் காட்டுகின்றனர். சிவகங்கை மாவட்டத்தில், கடந்த சில நாட்களாக பரவலாக நல்ல மழை பெய்து வருகிறது. கடந்த தென்மேற்கு பருவ மழை காலத்தில் காரைக்குடி தாலுகாவில் அதிகபட்மாக மழை பெய்தது. அக்கால கட்டத்தில் கண்மாய், ஊரணி நிரம்பின. ஆனால், பிற தாலுகாக்களில் போதிய மழை இல்லை. தற்போது, பரவலாக அனைத்து தாலுகாக்களிலும் மழை பெய்து வருகிறது. செழிப்பு: குறிப்பாக, செப்டம்பர் கடைசியில் இருந்தே, தொடர்ந்து மழை பெய்து வந்தபோதிலும், மாவட்டத்திலேயே திருப்புவனம் தாலுகாவில் தான் அதிக மழை பெய்துள்ளது. கடந்த 2ம் தேதி 56.4, நேற்று காலை நிலவரப்படி 50.2 மி.மீ.,வரை பதிவாகியுள்ளது. இதனால், மாவட்டத்தில் மற்ற தாலுகாக்களை விட,திருப்புவனத்தில் விவசாய பணி அதிகமாக நடைபெற்று வருகிறது. தோட்டக்கலைத்துறை உதவி இயக்குனர் கல்யாணசுந்தரம் கூறும் போது, திருப்புவனம் தாலுகாவில் அதிகமழை பதிவாகி வருவதால், நெல் அறுவடை செய்த விவசாயிகள், கிடைத்த தண்ணீரை பயன்படுத்தி கத்தரி, மிளகாய் உள்ளிட்ட தோட்டக்கலை பயிர்களை 120 எக்டேரில், நடவு செய்ய துவங்கியுள்ளனர். நல்ல மழை பெய்துள்ளதால், 200 எக்டேர் வரை வாழை நடவு பணிகளை விவசாயிகள் துவக்கிவிட்டனர், என்றார். மழைஅளவு(மி.மீ.) காரைக்குடி - 0 மானாமதுரை - 5.4 சிவகங்கை - 7.0 திருப்புவனம்-50.2 திருப்புத்தூர்-0 இளையான்குடி-2.2 தேவகோட்டை - 0

## ஸ்ரீவி., பகுதியில் மழை

ஸ்ரீவில்லிபுத்தூர் : ஸ்ரீவில்லிபுத்தூரில் கடந்த நான்கு ஆண்டுகளாக மழை இல்லாமல் கண்மாய்கள் ,கிணறுகள் வறண்ட நிலையில் காணப்படுகின்றன . விவசாயமே செய்ய முடியாமல் நிலங்கள் வானம் பார்த்த பூமியாக உள்ளன. இதனால் மக்கள் செய்வதறியாது திண்டாடி வருகின்றனர். இந்நிலையில் கடந்த இரு நாட்களாக மாலை நேரங்களில் ஸ்ரீவில்லிபுத்தூர் பகுதிகளில் மழை பெய்து வருகிறது. இந்த மழையால் கண்மாய்களுக்கு வெள்ளம் எதுவும் வராவிட்டாலும், வெயிலின் தாக்கம் குறைந்துள்ளது. இந்த மழை தொடர வேண்டுமென மக்கள் விரும்புகின்றனர்.* விருதுநகரில் கடந்த சில வாரங்களாக வெயில் வாட்டி எடுத்த நிலையில் நேற்றுமுன்தினம் மாலை மழை பெய்தது. இதனால் ஓரளவு வெப்பம் தணிந்தது. இந்நிலையில், நேற்று மாலை 4.30 மணிக்கு இடி மின்னலுடன் பலத்த மழை பெய்தது. வாகன ஓட்டிகள் அவதிப்பட்டனர். 6 மணிக்குப்பின் சாரல் மழை தொடர்ந்தது

## விதை கிராம திட்ட பயிற்சி

அருப்புக்கோட்டை :அருப்புக்கோட்டை அருகே கத்தாளம்பட்டியில், தேசிய வேளாண்., வளர்ச்சி திட்டத்தின் கீழ், பயறு வகைகள் சாகுபடி பற்றிய விதை கிராம திட்ட பயிற்சி நடந்தது. ஊராட்சி தலைவர் பெருமாள் தலைமை வகித்தார். துணை இயக்குனர் பூவலிங்கம் முன்னிலை வகித்தார். கோவிலாங்குளம் வேளாண்., அறிவியல் நிலைய உழவியல் துறை பேராசிரியர் தீபாகரன் கோடை உழவு, மழைநீர் சேகரிப்பு, விதை தேர்வு, நேர்த்தி, பயறு வகைகளை பராமரித்தல் போன்ற தொழில்நுட்பங்களை விளக்கினார். வேளாண்., உதவி இயக்குனர் நாச்சியாரம்மாள் பூச்சி மற்றும் நோய் கட்டுபாடுகள் பற்றி விளக்கினார். விருதுநகர் உழவர் பயிற்சி நிலைய வேளாண் அலுவலர் சுந்தரவள்ளி மண் பரிசோதனை, மண் வளம் காத்தல், நுண்ணூட்டச் சத்துகள், ஊடு பயிர்கள் போன்ற தொழில்நுட்பங்களை கூறினார்.

வேளாண் அலுவலர் மூர்த்தி அறுவடை செய்தல், சேமிப்பு, சந்தைபடுத்துதல் பற்றி கூறினார். பயிற்சிகளை முன்னோடி விவசாயி பாக்ககியராஜ், உதவி வேளாண்., அலுவலர்கள் ராமராஜ், சந்திரசேகர் செய்தனர். உதவி வேளாண் அலுவலர் ஜெயபாண்டி நன்றி கூறினார்.

**<u>தூத்துக்குடி துறைமுகத்தில் 1 ம் எண் புயல் எச்சரிக்கை கூண்டு</u>**

தூத்துக்குடி : வங்க கடலில் புயல் சின்னம் உருவாகியிருப் பதால்,தூத்துக்குடி துறைமுகத்தில் 1ம் எண் புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்றப்பட்டுள்ளது. மீனவர்கள் கடலுக்குள் செல்ல வேண்டாம், என எச்சரிக்கப்பட்டுள்ளனர். தமிழகத்தில் வங்க கடலில் காற்றழுத்த தாழ்வு நிலை ஏற்பட்டு, புயல் சின்னமாக மாறியுள்ளது. இதனை தொடர்ந்து வானிலை ஆய்வு மையம் புயல் எச்சரிக்கை விடுத்துள்ளது. இதனை தொடர்ந்து தூத்துக்குடி துறைமுகத்தில் 1 ம் எண் புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்றப்பட்டுள்ளது. காற்றின் வேகம் அதிகரித்துள்ளதால், மீனவர்கள் கடலுக்குள் செல்ல வேண்டாம், என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. கடலோர பகுதிகளில் வசிப்பவர்கள் எச்சரிக்கையுடன் இருக்கவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**<u>அந்தமான் அருகே புயல் சின்னம் தமிழகத்தில் மழை பெய்யும்</u>**

சென்னை: ஆந்திராவை ஒட்டிய கடலோரப் பகுதியில் நேற்று முன்தினம் வளி மண்டல மேல் அடுக்கில் காற்று சுழற்சி ஏற்பட்டது. இதன் காரணமாக தமிழகத்தில் பரவலாக மழை பெய்து வருகிறது.

அதிகபட்சமாக மாரண்டஹள்ளியில் 80 மிமீ மழை பெய்துள்ளது. பாபநாசம் 70 மிமீ, குமாரபாளையம் 60 மிமீ, மணிமுத்தாறு, விழுப்புரம், திருப்புவனம் 50 மிமீ மழை பெய்துள்ளது. மியான்மரை ஒட்டிய கடற்பகுதி மற்றும் வட அந்தமான் கடலோர பகுதியில் குறைந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவாகியது. அது நேற்று காலை மேலும் வலுவடைந்து, காற்றழுத்த தாழ்வு மண்டலமாக மாறியுள்ளது. இது மேலும் வலுவடைந்து புயலாக மாறும் வாய்ப்புள்ளது. இது வட மேற்கு திசையில் நகரக்கூடும். இதனால், தமிழகத்துக்கு எந்த பாதிப்பையும் ஏற்படுத்தாது. இருப்பினும், ஆந்திராவை ஒட்டிய வட மேற்கு மற்றும் மத்திய மேற்கு வங்கக் கடல் பகுதியில் நிலை கொண்டுள்ள காற்று சுழற்சியால், தமிழகத்தில் மழை பெய்யும். சென்னையில் பொதுவாக மேகமூட்டம் காணப்படும். நகரின் ஒருசில இடங்களில் இடியுடன் மழை பெய்யும் என வானிலை மையம் தெரிவித்துள்ளது. வடகிழக்கு பருவமழை எப்போது? தற்போது தென் மேற்கு பருவமழை பெய்து வருகிறது. கடந்த ஆண்டைப் போல இந்த ஆண்டும் தென் மேற்கு பருவமழை காலத்தில் இயல்பான மழையே பெய்துள்ளது. இந்த பருவத்தில் தமிழகத்தில் 32 சதவீதம் மழை பெய்வது உண்டு. இந்த ஆண்டு 5 சதவீத மழை குறைந்துள்ளது. தமிழகத்தை பொறுத்தவரை வட கிழக்கு பருவமழை அக்டோபரில் தொடங்கும். மேல்திசைக் காற்று வீசுவது முற்றிலும் நின்று கீழ்த்திசை காற்று வீசத் தொடங்கி கடலோரத்தில் மழை பெய்தால்தான் வட கிழக்கு பருவமழை தொடங்கியது என்று அறிவிப்பார்கள். தற்போது தென் மேற்கு பருவமழையில் வட மேற்கு பகுதியில் ஒரு சில இடங்களில் மட்டும் தென்மேற்கு பருவமழை முடிவுக்கு வந்துள்ளது. வட கிழக்கு திசையில் இன்னும் முடிவுக்கு வரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இந்நிலையில், அந்தமான் பகுதியில் உருவாகியுள்ள காற்றழுத்த தாழ்வு மண்டலம் முடிவுக்கு வந்த பிறகு தான் வட கிழக்கு பருவமழை பற்றிய விவரம் தெரியவரும்.

<u>தொடர் மழை எதிரொலி கே.ஆர்.பி அணை நீர்மட்டம் உயர்வு</u>

கிருஷ்ணகிரி, : கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கடந்த இரு தினங்களாக தொடர்ந்து மழை பெய்து வருவதால் கே.ஆர்.பி அணையின் நீர்மட்டம் 40 அடியாக உயர்ந்துள்ளது. இதனால், விவசாயிகள் மகி ழ்ச்சி அடைந்துள்ளனர். கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கடந்த இரு தினங்களாக தொடர்ந்து மழை பெய்து வருகிறது. இந்த மழையால் நகர பகுதியில் உள்ளவர்களுக்கு சற்று சிரமம் ஏற்பட்டாலும், கிராம பகுதியில் உள்ள விவசாயிகள் பெரும் மகிழ்ச்சியடைந்துள்ளனர். கடந்த சில தினங்களாக கடும் வெயிலால் பாதிக்கப்பட்டு, நிலக்கடலை பயிர் கருகும் நிலை ஏற்பட்டது. ஆனால் தற்போது பெய்துள்ள இந்த மழையால் நிலக்கடலை விவசாயிகள் மட்டுமின்றி அனைத்து விவசாயிகளும் பெரும் மகிழ்ச்சியடைந்துள்ளனர். கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பல்வேறு பகுதியில் பெய்த இந்த மழையால் கிருஷ்ணகிரியில் அணையின் நீர்மட்டம் உயர்ந்து கொண்டிருக்கிறது. அதன் படி, நேற்று காலை 8 மணி நிலவரப்படி அதிகபட்சமாக தேன்கனிக்கோட்டையில் 25.20 மி.மீ மழை பதிவாகியுள்ளது. இதேபோல் கிருஷ்ணகிரி -23.40 மி.மீ., ஊத்தங்கரை - 20 மி .மீ., நெடுங்கல் -18.20 மி.மீ., ராயக்கோட்டை -12 மி.மீ., அஞ்செட்டி -12 மி.மீ., தளி -6 மி.மீ., பெணுகொண்டாபுரம் -5.20 மி.மீ., பாரூர் -4. 60 மி.மீ., சூளகிரி -3 மி.மீ., போச்சம்பள்ளி -1.20 மி.மீ என மழை பதிவாகியுள்ள து.தொடர் மழையால் கிரு ஷ்ணகிரி அணைக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. கடந்த 5ம் தேதி 39.25 அடி யாக இருந்த அணையின் நீர்மட்டம் நேற்று மாலை 3 மணி நிலவரப்படி 40 அடியாக உயர் ந்தது. அணைக்கு வரும் நீரின் அளவு வினாடிக்கு 636 கன அடியாக அதிகரித்துள்ளது. அணையில் இருந் து வலது புற கால்வாயில் 46 கன அடி, இடது புற கால்வாயில் 75 கன அடி என மொத்தம் 133 கன அடி தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. நீர்பிடிப்பு பகுதிகளில் தொடர்ந்து மழை பெய்யும் பட்சத்தில், இன்னும் ஒரு வாரத்தில் அணையின் மொத்த

உயரமான 52 அடி யை நீர் எட்டிவிடும் என பொதுப்பணித்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தொடர் மழையால் விவசாயிகள் மகிழ்ச்சி**

கிருஷ்ணகிரி மாவட்டத் தில் கடந்த 3 நாட்களாக பெய்து வரும் தொடர் மழையால் பொது மக் களும், விவசாயிகளும் மகிழ்ச்சியடைந் துள்ள னர். தொடர் மழை கிருஷ்ணகிரி மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் கடந்த 3 நாட்களாக தொடர்ந்து மழை பெய்து வருகிறது. நேற்று முன்தினம் காலை முதலே மேகம் மூட்டமாக காணப்பட்டது. இந்த நிலையில் மதியம் 2 மணி முதல் 3 மணி வரை தொடர்ந்து கனமழை பெய்தது. மாவட்டம் முழுவதும் 130.8 மில்லி மீட்டர் மழையளவு பதி வானது. இதனால் சாலை களில் வெள்ளம் பெருக் கெடுத்து ஓடியது. மேலும் மழை நீருடன் கழிவுநீர் கலந்து சாலையில் ஓடியதால் பொது மக்கள் வாகன ஓட்டிகள் அவ திப்பட்டனர். நகரின் முக்கியப் பகுதிகளில் குளிர்காற்று வீசிய தால் பொதுமக்கள் மகிழ்ச்சியடைந்தனர். விவசாயிகள் மகிழ்ச்சி இதே போல் சுற்று வட்டாரப் பகுதிகளில் பெய்த மழையால் மானாவாரி பகுதிகளில் கடலை பயிரிட்டுள்ள விவ சாயிகள் மகிழ்ச்சியடைந்துள் ளனர். அத்துடன் அனைத்து விவசாயப் பயிர்களும் செழிப்புடன் காட்சியளித்தது. தொடர்ந்து இதே போல் மழை பெய்தால் ஏரி குளம் போன்ற நீர் நிலைகளில் நீர்மட்டம் உயர வாய்ப்புள்ளதாக விவ சாயிகள் தெரிவித்தனர். நேற்று காலை வரை பெய்த மழையால் மாவட்டம் முழு வதும் 130.8 மில்லி மீட்டர் மழையளவு பதிவானது. நேற்று காலை 8 மணி நில வரப்படி தேன்கனிக்கோட்டை யில் அதிகபட்சமாக 25.2 மி.மீட்டர் மழை பதிவானது. இதே போல்

கிருஷ்ணகிரி 23.04 மி.மீட்டர், போச்சம் பள்ளி 1.2 மி.மீட்டர், பாரூர் 4.6 மி.மீட்டர், பெணுகொண்ட புரம் 5.2 மி.மீட்டர், அஞ்செட்டி 12 மி.மீட்டர், தளி 6 மி.மீட்டர், ராயக்கோட்டை 12 மி.மீட்டர், ஊத்தங்கரை 20 மி.மீட்டர், சூளகிரி 3 மி.மீட்டர், நெடுங்கல் 18.2 மி.மீட்டர் என மழை பதிவாகியுள்ளது.

## திருச்செங்கோடு பகுதியில் அதிகபட்சமாக 98 மி.மீட்டர் மழை பதிவு

நாமக்கல் மாவட்டத்தில் நேற்று முன்தினம் இரவு இடி– மின்னலுடன் பரவலாக மழை பெய்தது. பெரும்பாலான இடங்களில் கனமழை பெய்ததால், விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்து உள்ளனர். நேற்று காலை நிலவரப்படி அதிகபட்சமாக திருச்செங்கோடு பகுதியில் 98 மி.மீட்டர் மழைபதிவாகி இருந்தது. நேற்று காலை 8 மணி நிலவரப்படி மாவட்டத்தில் பதிவான மழை அளவு மி.மீட்டரில் வருமாறு:– திருச்செங்கோடு – 98, சேந்தமங்கலம் – 65, ராசிபுரம் – 62, எருமப்பட்டி – 40, பரமத்திவேலூர் – 34, குமாரபாளையம் – 34, மங்களபுரம் – 24, மோகனூர் – 11, புதுச்சத்திரம் – 5, நாமக்கல் – 3. மாவட்டத்தின் மொத்த மழை அளவு 377 மி.மீட்டர் ஆகும். சராசரி மழையளவு 37.7 மி.மீட்டர் என்பது குறிப்பிடதக்கது.